மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02–ம் நாள் திங்கட்கிழமை
அ.வ.எண். 115/24

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

பெயர்: விஜயகுமார் தேதி : 02.02.26
வயது : த/பெ : பால கெங்காதரன்
கிராமம் : தொழில் :
மாவட்டம்:

---

<u>02.02.26 குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு எழுத படிக்க தெரியாது. கையெழுத்து மட்டும் போடுவேன். வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விவரத்தை எனக்கு படிக்க தெரியாது என்றால் சரிதான். என் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு படித்துக்காட்டப்பட்டது என்றால் ஆம். யார் படித்து காட்டினார் என்றால் அண்ணன் மகள். என் அண்ணன் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளார். அவருக்கு எழுத படிக்க தெரியும். என்னுடன் இன்று யார் யார் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார் என்றால் எனது மகளும், எனது அண்ணன் மகளும் வந்துள்ளார்.

2.இந்த வழக்கை பற்றி என்னை விட என் அண்ணனுக்கு முழு விபரம் தெரியும் என்றால் சரிதான். வழக்கு சொத்தின் பழைய சர்வே எண் என்ன என்றால் தெரியாது. புதிய சர்வே எண்ணும் தெரியாது. வழக்கு சொத்தின் விஸ்தீரணம் மொத்தம் 4.5 செண்ட் ஆகும். 4.5 செண்ட் தான் வழக்கு சொத்து என்று சொல்லியுள்ளேனா என்றால் தெரியாது. இவ்வழக்குரையில் பழைய சர்வே

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.02 18:48:54 +0530

எண் 1102A/9 புதிய சர்வே எண். 1102A/53க்கு 120 சதுர மீட்டர் மனையின் கீழ்புறம் 40 சதுர மீட்டர் என்று சொல்லியுள்ளேன் என்றால் 120 சதுர மீட்டருக்கு வழக்கு போட்டுள்ளேன்.

3.சொத்து விபரத்தில் 4 பக்கம் யார் யார் இடம் உள்ளன என்று குறிப்பிட்டு எல்கை மால் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் எனது தாத்தா எனக்கு எழுதிக் கொடுத்துள்ளார். என்ன ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் உயில் எழுதிக்கொடுத்துள்ளார். நான் சொல்லியுள்ள உயில் 01.06.1970 ல் துரைச்சாமி நாடாரால் எழுதப்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த உயில் வழக்கு சொத்து எத்தனையாவது ஆவணமாக காண்பிக்கப்பட்டுள்ளது என்று என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான்.

4.வா.சா.ஆ 1 உயில் ஆவணத்தில் வழக்கு சொத்து காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தும் வா.சா.ஆ 1ல் காண்பிக்கப்பட்ட சொத்தும் வேறு வேறு சொத்துக்கள் என்றால் சரியல்ல. என் தாத்தா 01.06.1970 ல் மட்டும் தான் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். வேறு எந்த தேதியிலும் என் தாத்தா உயில் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ல் கண்ட சொத்துதான் வழக்கு சொத்து என்று என் அண்ணனை அழைத்து விசாரித்தால் தெரியும் என்றால் அவர் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளார். வேறு யாரை அழைத்து விசாரித்தால் இது

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.02 18:49:07 +0530

பற்றி தெரியும் என்றால் எண் அண்ணன் மனைவியை அழைத்து விசாரித்தால் தெரியும்.

5.பால கெங்காதரன்–மூக்கம்மாள் தம்பதியினருக்கு வாதிகளும், 1ம் பிரதிவாதியும் வாரிசுகள் என்றால் சரிதான். என் பெற்றோருக்கு பெண் வாரிசுகள் யாரும் கிடையாது என்றால் சரிதான். என் அப்பா இறந்து 3 வருடம் இருக்கும். தேதி தெரியாது. வழக்குரையில் என் அம்மா மற்றும் அப்பா இறந்த விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. துரைச்சாமி நாடார் எந்த தேதியில் இறந்தார் என்று வழக்குரை மற்றும் நிரூபணவாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என் தாத்தாவின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6.என் தாத்தா இறக்கும்போது எனக்கு 12 வயது இருக்கும். என் தாத்தா எந்த ஊரில் வைத்து இறந்தார் என்று குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் எந்த ஊரில் வைத்து இறந்தார் என்று தெரியாது. நானும், 1ம் வாதியும் வருடம் தோறும் எங்கள் ஊர் கோவில் திருவிழா மற்றும் நல்லது கெட்டதுக்கு வந்து செல்வோமா என்றால் இப்போது வருவது கிடையாது. எத்தனை வருடமாக அவ்வாறு வராமல் இருந்தோம் என்றால் 8, 9 வருடங்களாக வராமல் இருந்தோம். எனக்கும், 1ம் வாதிக்கும் சென்னையில் சொந்த வீடு உள்ளது என்றால் 1ம் வாதிக்கும், எனது மகனுக்கும் சொந்த வீடு உள்ளது.

7.1ம் பிரதிவாதியின் புதுமனை புகுவிழாவில் நானும், 1ம் வாதியும் குடும்பத்தோடு கலந்து கொண்டோம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.02.02 18:49:14 +0530

பொறுத்து என் தாத்தா பெயரிலோ, என் அண்ணன் பெயரிலோ, என் பெயரிலோ பட்டா கிடையாது என்றால் சரிதான். வருவாய்துறையில் என் தாத்தா காலத்திற்கு பின்னர் வழக்கு சொத்திற்கு என் தாத்தா பெயரில் பட்டா உள்ளதா என்று தேடிப்பார்த்தேனா என்றால் இல்லை. வழக்கு சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று இதுவரை வருவாய்துறையில் மனு கொடுத்தோமா என்றால் இல்லை.

8.பிரதிவாதிகளின் எதிர்வழக்குரை சங்கதிகளை படிக்க கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் ஆம். வழக்கு சொத்து செல்லக்கனி அம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்று எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆம். அதே போன்று செல்லக்கனி அம்மாளிடம் வாய்மொழி கிரையம் பெற்று வீடு கட்டி குடியிருந்து வருவதாக எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளார் என்றால் ஆம். 1ம் பிரதிவாதி கையிருப்பு மனை 80 சதுர மீட்டர் வைத்து கொண்டு மேல்புறம் 40 சதுரமீட்டர் மனையும், வீடும் மனைவிக்கு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் ஆம். ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார்.

9.வழக்கு சொத்து 40 சதுரமீட்டர் மனையில் உள்ள வீட்டிற்கு 2ம் பிரதிவாதி வீட்டு தீர்வை மற்றும் மின் கட்டணம் செலுத்தி வருகிறார் என்றால் சரிதான். மேற்படி வீடு கீழ்தளம் மற்றும் மேல்தளம் கொண்டது என்றால் சரிதான். வா.சா.ஆ 1 உயிலில் மொத்தம் எத்தனை சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் வழக்கு சொத்து எந்த சொத்து என்றும் என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி செட்டில் மெண்ட் செய்து

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.02 18:49:21 +0530

கொடுத்த விபரம் எத்தனை வருடத்திற்கு முன்பு தெரியும் என்றால் வழக்கு போட்டதில் இருந்து 4 வருடத்திற்கு முன்பு தெரியும். இது தொடர்பாக வில்லங்சான்றிதழ் எடுத்து பார்த்தேனா என்றால் இல்லை.

10.பிறகு எப்படி தெரிந்து கொண்டேன் என்றால் ஊர்க்காரர் கணேசன் சொல்லி 1ம் வாதி தெரிந்துகொண்டார். கணேசனின் அப்பா பெயர் தெரியாது. வழக்கு சொத்தின் மதிப்பு ரூபாய் 48, 400 என்று நான் சொல்லியுள்ளது தவறு என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் மதிப்பு ரூபாய் 67,000 என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் அடி மனை மதிப்பு எவ்வளவு என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி என்னுடன் பேசிக் கொள்வார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 1ம் வாதியுடன் பேசிக்கொள்வாரா என்றால் பேசிக்கொள்ளமாட்டார்.

11.நாங்களும், 1ம் பிரதிவாதியும் எப்போதிலிருந்து பேசிக்கொள்ளமாட்டோம் என்றால் வழக்கிற்கு பிறகு பேசிக்கொள்ளமாட்டோம். வழக்கிற்கு பிறகாவது வழக்கறிஞர் மூலம் அல்லது நானாக வழக்கு சொத்திற்கு யார் பெயரில் பட்டா உள்ளது என்று தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். யார் பெயரில் உள்ளது என்றால் 1ம் பிரதிவாதி பெயரில் உள்ளது. அதற்கு முன்பு யார் பெயரில் பட்டா இருந்ததாக தெரிந்துகொண்டேன் என்றால் யார் பெயரிலும் இல்லை.

12.வழக்கு சொத்தை பொறுத்து என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் எங்கள் பெயரில் உள்ள சொத்தை 1ம் பிரதிவாதி அவர் பெயரில் மாற்றியுள்ளார். அதை திரும்ப கேட்டு வழக்கு போட்டுள்ளோம். வழக்குரையில் பிரதிவாதிகள்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.02 18:49:27 +0530

வாதிகள் சென்னையில் இருப்பதை பயன்படுத்தி கொண்டு கடந்த 2020 வருடம் செப்டம்பர் மாதம் சட்டமுரணாக அத்துமீறி சிறிய வீடு கட்டியுள்ளதாக சொல்லியுள்ளோம் என்றால் ஆம்.

13.120 சதுர மீட்டர் மனையை 1ம் பிரதிவாதியிடம் இருந்து எங்களிடம் ஒப்படைக்க கோரி வழக்கு போட்டுள்ளோம் என்றால் ஆம். வழக்குரையில் கேட்டுள்ள பரிகாரங்கள் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2020ம் ஆண்டு நவம்பர் மாதம் நான் ஊருக்கு வந்தேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி சென்னையில் தான் உள்ளார் என்றால் சரிதான். நல்லது, கெட்டதுக்கு ஊருக்கு வருவார் என்றால் சரிதான். நானும், 1ம் வாதியும் 1ம் பிரதிவாதியிடம் வழக்கு சொத்தை குறைந்த விலைக்கு கிரையம் கேட்டோம் என்றால் சரியல்ல. அவர் தராததால் தான் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

14.ஆரம்பகாலத்தில் நாங்களும், 1ம் பிரதிவாதியும் ஒன்றாக தான் தொழில் செய்து வந்தோம் என்றால் சரிதான். எத்தனை ஆண்டுகள் அவ்வாறு தொழில் செய்தோம் என்றால் 20, 25 ஆண்டுகள் இருக்கும். 1ம் பிரதிவாதிக்கு திருமணம் ஆகி 30 வருடங்கள் இருக்கும். 1ம் பிரதிவாதியின் திருமணத்திற்கு பிறகு நாங்கள் தனித் தனியாக தொழில் செய்து வருகிறோம் என்றால் சரிதான். திருமணத்தில் இருந்து நாங்கள் சரிவர பேசிக்கொள்ளமாட்டோம் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தற்போது மளிகை கடை வைத்துள்ளார். நான் காய்கறி கடை மற்றும் மளிகை கடை வைத்துள்ளேன்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.02 18:49:32 +0530

15.தாவா சொத்து நத்தம் வகைபாடு என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி குறைந்த விலைக்கு கிரையம் கொடுக்காததால் வழக்கு சொத்தை அபரிக்கும் நோக்கில் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா சொத்து துரைச்சாமி நாடாருக்கோ, எங்களுக்கோ பாத்தியப்பட்டது கிடையாது என்றால் சரியல்ல. செல்லக்கனி அம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 1 உயில் எந்த ஆவணத்தின் அடிப்படையில் எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தினை நானோ, என் தாத்தாவோ எந்த காலத்திலும் அனுபவித்தது கிடையாது என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.02.02 18:49:36 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.